[மாண்புமிகு மேலவைத் தலைவர்] [1981 மார்ச் 2

1. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 9/1981).

2. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 17/1981).

4. கவன ஈர்ப்பு.

(1) பதினோராண்டு பள்ளிப் படிப்புத் திட்டத்தின் கீழ் (1969 திட்டம்) 1980 ஆம் ஆண்டு அக்டோபரில் நடைபெற்ற பள்ளி இறுதி வகுப்புத் தேர்வில் (எஸ்.எஸ்.எல்.சி.) தேர்ச்சி பெறாத மாணவர்கள் இனி அப்படிப்பை முடித்து மேற்கொண்டு படிப்பைத் தொடர முடியாமல் உள்ள அவல நிலை குறித்து.

திரு. த. சந்தோஷம்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, பதினோராண்டு பள்ளிப் படிப்புத் திட்டத்தின் கீழ் (1969 திட்டம்) 1980 ஆம் ஆண்டு அக்டோபரில் நடைபெற்ற பள்ளி இறுதி வகுப்புத் தேர்வில் (எஸ்.எஸ்.எல்.சி.) தேர்ச்சி பெறாத மாணவர்கள் இனி அப்படிப்பை முடித்து மேற்கொண்டு படிப்பைத் தொடர முடியாமல் உள்ள அவல நிலை குறித்து மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை @ ஒன்று அவையின் முன்வைக்கப்பட்டுள்ளது.

திரு. பா. ரா. தாமஸ்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இந்த 1969 ஆம் ஆண்டுத் திட்டத்தின் கீழ் தேர்வில் தோல்வி அடைந்த மாணவர்கள் வருகின்ற ஆண்டு 1981 மார்ச்சு தேர்வு எழுத முடியாத நிலையில் இருக்கின்ற காரணத்தினால், ஒருவேளை அந்த இடைக்கால நாட்களுக்குள் அவர்கள் வயது வரம்பை மீறுவார்கள் என்ற நிலைமைகள் ஏற்படும். அவர்கள் எஸ்.எஸ்.எல்.சி. படிப்புத் தகுதியுடன் வேலை வாய்ப்புக்கு என்று செல்லும் போது, அந்த வாய்ப்புக்கள் அவர்களுக்கு நழுவக்கூடிய நிலை இருக்கிறது

@ 77-79 ஆம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

ஆகவே இதைப்பற்றி அரசு மீண்டும் பரிசீலனை செய்து; அவர்கள் 1981 ஆம் ஆண்டு மார்ச்சு தேர்வினை நடத்துவதற்கு ஆணை பிறப்பிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, ஒரு புதிய திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்று அவர்கள் தேர்ச்சி பெறாமல் இருக்கின்றார்கள். இப்போதுள்ள நிலையில் அவர்களை எழுத அனுமதிக்க முடியாது. அவர்களுக்குப் பரீட்சை நடத்துவதற்குப் பல்வேறு முன்னேற்பாடுகளைச் செய்துதான் நடத்த வேண்டும். அப்படிப்பட்ட முன்னேற்பாடுகள் இல்லாத நிலைமையில், அந்தப் பரீட்சையை நடத்தும் நிலையில் நிர்வாகம் இல்லை என்பதை மாண்புமிகு அங்கத்தினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

குறிப்பாக வேலை வாய்ப்பு என்று ஒரு நிலை வரும்போதுதான், இவர்கள் அந்த வாய்ப்பை இழக்கக்கூடிய அளவுக்கு "ஃபெயில்" ஆகியிருப்பவர்கள், ஆகிறார்கள். ஆனால் மற்றவர்களெல்லாம் இருக்கின்றார்கள். அவர்கள் அந்தப் பயனை அடைந்து கொண்டிருக்கின்றார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்துள்ள அறிக்கையிலே, விருப்பப் பாடம் தவிர மற்ற 5 பாடங்கள் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்த 5 பாடங்கள் என்று கணக்கிடும் போது, அவர்கள் விருப்பப்பட்ட பாடங்களில் மதிப்பெண்கள் குறைந்திருந்தாலும், அவர்கள் எழுத வேண்டிய அவசியம் இல்லையா? அப்படிக் கணக்கிடும்போது கூடுதல் மதிப்பெண்கள் 500-க்குக் கணக்கிடப்படுமா அல்லது 600-க்குக் கணக்கிடப்படுமா என்பதைப்பற்றி விவரங்களை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: விருப்பப் பாடங்கள் கணக்கெடுக்கப்படாது என்ற விவரம்தான் தரப்பட்டிருக்கிறது. மேற்கொண்டு விவரங்கள் அங்கத்தினர்களுக்குத் தேவைப்பட்டால், தனியாக ஒரு வினா போடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

20 **பதினோராண்டு பள்ளிப்படிப்புத் திட்டத்தின்கீழ் (1969 திட்டம்) 1980 ஆம் ஆண்டு அக்டோபரில் நடைபெற்ற பள்ளி இறுதி வகுப்புத் தேர்வில் (எஸ்.எஸ்.எல்.சி.) தேர்ச்சி பெறாத மாணவர்கள் இனி அப்படிப்பை முடித்து மேற்கொண்டு படிப்பைத் தொடர முடியாமல் உள்ள அவல நிலை குறித்து**

[1981 மார்ச் 2

செல்வி அ. லீலாவதி : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த மாணவர்களுக்கு 10 ஆம் ஆண்டுப் பரீட்சைத் தாள்களையே கொடுத்தால், நன்றாக இருக்கும். ஏனென்றால், அவர்களை மார்ச் மாதம் பரீட்சை எழுத முடியாமல் செய்து, அவர்கள் அக்டோபர் மாதம் பரீட்சை எழுதக்கூடிய நிலை ஏற்படுமானால், அவர்களுக்கு வயதாகிவிடும் நிலைமையும் ஏற்பட்டுவிடும். வேலை வாய்ப்புக்குத் தடை ஏற்படும். ஆகவே கால தாமதம் இல்லாமலிருக்கும் பொருட்டு இந்த 10 ஆம் ஆண்டு பரீட்சைத் தாள்களையே கொடுப்பதால், மாணவர்களுக்கும் பாதகமில்லை, அரசுக்கும் பாதகமில்லை. அவர்கள் அந்த பரீட்சைத் தாள்களையே எழுதலாம் என்று நினைக்கிறேன். அதைப்பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசிலனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, 10வது ஆண்டு பரீட்சைத் தாள்களை வைத்து எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்கள் பரீட்சையை மார்ச்சில் எழுத முடியாது. அவர்கள் அக்டோபரில்தான் பரீட்சை எழுத முடியும். இதற்கு இரண்டு காரணங்கள் இருக்கின்றன. அவர்கள் புதிய புத்தகங்களைப் படிக்க வேண்டிய நிலைமைகள் இருக்கின்றன. இன்னொரு காரணம், பரீட்சை நிறுவனத்தில் திடீரென்று நாம் எந்த மாறுதலையும் செய்ய முடியாது. அதற்கு வேண்டிய முன்னேற்பாடுகள் சிலவற்றைச் செய்ய வேண்டியிருக்கிறது. இப்போது கம்ப்யூட்டர் முறைகள் பயன்படுத்தப்படுவதால், இடையிலே எந்தவிதமான மாறுதலையும் செய்ய முடியாது. குறுகிய காலத்தில் அவைகளைச் செய்வதற்கில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(2) தமிழ்நாடு வேளாண்மைத் துறை ஊழியர்கள் தங்கள் 7 அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி பேரணி நடத்தியும், உண்ணா நோன்பிருந்தும் பலன் இல்லாமை குறித்து.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு வேளாண்மைத் துறை ஊழியர்கள் தங்கள் 7 அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி 23-1-1981 அன்று பேரணி நடத்தியும், 24-1-1981 அன்று சென்னை அண்ணா சதுக்கத்துக்கருகே உண்ணா நோன்பிருந்தும் பலன